

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதியில் தே.மு.தி.க. வேட்பாளர் மோகன் ராஜுக்காக சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன் வேட்பாளருடன் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார்



ஈரோடு மாவட்ட கழக மூத்த முன்னோடியும்,: முன்னாள் மாவட்ட கழக துணை செயலாளரும், ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர பெரும் பங்காற்றியவரும், முன்னாள் நகர மன்ற உறுப்பினருமான ராஜு (எ) ஆ.நெடுமாறன் 31.3.2026 செவ்வாய்க்கிழமை இரவு மறைவு எய்தியதையறிந்த மாவட்டச் செயலாளரும் , அமைச்சருமான சு.முத்துசாமி நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். அதுபோது கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன், ப.க.பழனிச்சாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் தீபலட்சுமி உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

### குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் பா.ஜ.க.வினர்தான்!

# டெல்லியில் ஆட்சி மாற்றம் வருகிறபோது அந்த உண்மை தெரியும்!

## புதுக்கோட்டையில் – இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. ஏப் 3–

புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகமான பெரியண்ணன் மாளிகையில் திமுக கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தி.மு.க.வின் வேட்பாளர்களான அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை எம்.எல்.ஏ. டாக்டர் வை.முத்துராஜா உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு தேர்தலில் எப்படி களப் பணி ஆற்ற வேண்டும் அனைவரும் எப்படி ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று விவாதித்தனர்.



இதன் பின்னர் செய்தி யாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

ஒரு இடத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றால் ரோட்ஷோ நடத்த வேண்டும் என்றால் அதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு அனுமதி பெற வேண்டும்.

எத்தனை பேர் வருவார்கள் எவ்வளவு கூட்டம் வரும் என்று தெரிவிக்க வேண்டும்.

5000 பேர் என்று தெரிவித்து விட்டு 40 ஆயிரம் முப்பதாயிரம் பேர் வந்தார்கள் என்றால் 5000 பேர் வருவதை எதிர்பார்த்து தான் காவல்துறை ஆட்களை அனுப்ப முடியும்.

ஏன் ஆட்கள் வரும் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் ஆட்கள் அதிகமாக வருவார்கள் என்று சொன்னால் அதற்கு தகுந்தார் போல் காவல்துறை அனுமதி கொடுக்கும்.

நாங்கள் எங்கள் நிகழ்ச்சி நடத்தும்போது இத்தனை பேர் வருவார்கள் என்று சொன்னால் காவல் துறை உரிய பாதுகாப்பை தருகிறது.

அனைத்துமே தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதனால் தமிழ்நாடு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. உங்களுக்கும் தெரியும். அவர்களுக்கும் தெரியும். எந்த நடவடிக்கை எடுத்தாலும் தேர்தல் ஆணையம் தான் எடுக்க வேண்டும். அதனால் தேர்தல் ஆணைய விதிகளை பின்பற்று கிறவர்களுக்கு எந்த வித சிக்கலும் ஏற்படாது. பின்பற்றாமல் விதிமுறை செய்தால் அதற்குரிய தண்டனையை அவர்கள் அனுபவித்து தான் ஆக வேண்டும்.

வேண்டுமென்றே எதை வேண்டுமென்றாலும் யார் வேண்டுமென்றாலும் செய்யலாம் நாங்கள் அதைப்பற்றி அக்கறைப்பட வேண்டியதில்லை. வேண்டு மென்றே பொய் குற்றச்சாட்டுகளை சொல்பவர்களுக்

கெல்லாம் நாங்கள் பதில் கூற தயாராக இல்லை.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைத்தான்

ஜெராக்ஸ் எடுத்து எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருக்கிறாரே தவிர அவர் புதிதாக ஒன்றையும் செய்யவில்லை. திமுகவின் தேர்தல் அறிக்கை அதிமுகவின் ஜெராக்ஸ் காபி அல்ல, நாங்கள் சொல்லியிருப்பது எல்லாமே நடக்கக்கூடியவை நடைமுறைப் படுத்தக் கூடியவை அப்படிப்பட்ட சாதனை உள்ள தலைவர் திமுக தலைவர், எடப்பாடி பழனிச்சாமியின் சாதனை உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

தி.மு.க. தேர்தல் அறிக்கை கதாநாயகனாக இல்லை வில்லனும் காமெடியனுமாக இருக்கிறது என்று விமர்சனம் செய்யும் அன்புமணியைப் போன்ற ஒரு காமெடியனும் வில்லனும் உலகத்தில் இருக்க முடியாது தந்தைக்கே வில்லனாக இருக்கக்கூடியவர் மக்களுக்கு எப்படி நல்லவராக இருப்பார்.

வாஜ்பாய் போன்ற அமைதியான ஒரு மனிதரை நாம் பார்க்க முடியாது. வாஜ்பாயை இந்தியாவில் இருக்கக்கூடியவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவராக இருந்தார். அவருடன் நட்புடன் பழகிய இயக்கம் தான். தி.மு.க.வே தவிர எந்த விதத்திலும் சமரசமும் சமாதானமும் செய்து கொள்ளவில்லை, நாங்கள் எங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்க வில்லை என்றைக்கும் தி.மு.க. கொள்கையை விட்டுக் கொடுக்காது. அதற்காக ஒருமுறை இல்ல இரண்டு முறை இந்தியாவிலேயே ஆட்சியை இழந்த கட்சி இருக்கிறது என்றால் அது திமுக என்ற இயக்கமே தவிர வேறு எதுவும் இல்லை, எங்களுக்கு ஆட்சி பெரிதல்ல கொள்கைதான் பெரிது

தி.மு.க. அருமையான வேட்பாளர் பட்டியலை அறிவித்துள்ளது. 60 புதுமுக வேட்பாளர்கள் ஒரே நேரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளனர். எடப்பாடி அதை செய்யவில்லை. தேடித்தேடி பார்த்து பழைய முகத்தை தான் கொண்டு வந்துள்ளார். டெபாசிட் போகக்கூடிய தொகுதிகளை எல்லாம் பா.ஜ.க.வுக்கும் அவர்களது கூட்டணி கட்சிக்கும் தள்ளிவிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. ஆனால் அதிமுகவிற்கு மற்ற இடங்களிலும் அதிமுக டெபாசிட் வாங்குவதே சிரமம் அங்கேயும் டெபாசிட் போகும் அளவுக்கு தி.மு.க. அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

குற்றவாளி கூண்டில் தி.மு.க. அரசு என்று 27 பக்க அறிக்கையை பாஜக வெளியிட்டுள்ளது நாங்கள் 72 பக்க அறிக்கையை வெளியிட முடியும். குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் பாஜகவினர் தான் என்பது டெல்லியில் ஆட்சி மாற்றம் வருகின்றபோது அந்த உண்மை தெரியும். எந்த அளவுக்கு அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை ஆட்சி மாற்றம் உறுதி செய்யும். அவர்கள் அத்தனை பேரும் உள்ளே செல்வது உறுதி என்று தெரிவித்தார்.



கூலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தளபதி முருகேசன் சுல்தான்பேட்டை மற்றும் கணியூர், அரசூர் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டு சட்டமன்றத் தேர்தல் 2026 முன்னிட்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பல்லடம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மேற்காசியப் போரில் நடுக்கடலில் கொல்லப்பட்ட 3 இந்திய நாட்டு மாலுமிகள்,

# 4 மாலுமிகள் காயம் - ஒருவரைக் காணவில்லை!

## சொந்த நாட்டுக் குடிமக்களை காக்கத் தவறிய ஒன்றிய அரசுக்கு– கே.இ.பிரகாஷ் எம்.பி, கடும் கண்டனம்!

புதுடெல்லி, ஏப்.3–

மேற்காசியப் போரால் பெர்சிய வளைகுடாவில் சிக்கித்தவிக்கும் இந்திய நாட்டைச் சேர்ந்த மாலுமிகளின் நிலை குறித்து, நாடாளுமன்றத்தில் துறை முகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அளிக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து, வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிந்து வந்த இந்திய நாட்டைச் சேர்ந்த மாலுமிகளில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 4 பேர் காயமுற்றுள்ளனர், ஒருவரைக் காணவில்லை ஆகிய அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தியக் கப்பல்களில் பணியாற்றுபவர்களின் நிலை குறித்த விவரங்களை ஒன்றிய அரசு வழங்கவில்லை.

தக்க நேரத்தில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து நம் நாட்டு குடிமக்களை காக்கத்தவறிய இந்த ஒன்றிய அரசிற்கு, எனது வலுவான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

1.கொல்லப்பட்ட இந்திய மாலுமிகள் குறித்து பதிலடி நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசு

மேற்காசியப் போர் பதற்றம் ஏற்பட்ட சூழலில் இருந்தே, வெளிநாட்டுக் கப்பல்கள் மற்றும் இந்தியக் கப்பல்களில் பணியாற்றும் இந்தியாவைச் சேர்ந்த மாலுமிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று நாட்டு மக்களும் அவர்களின் உறவினர்களும் ஒன்றிய அரசிற்கு கோரிக்கை விடுத்தார்கள்.

ஆனால், இந்த கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறிய ஒன்றிய அரசு, தற்போது நம்முடைய நாட்டைச் சேர்ந்த 3 மாலுமிகளை பலி கொடுத்துள்ளது. மேற்கொண்டு 4 பேர் காயமுற்றிருக்கிறார்கள். காணாமல் போயிருக்கும் ஒருவரும் மீட்கப்படுவாரா என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

ஒன்றிய அரசு அளித்த விவரங்களின் படி, இந்த சம்பவம் நடந்து பல வாரங்கள் கடந்துவிட்டன. எனினும், இதற்குரிய பதிலடி நடவடிக்கைகள் எதையும் இதுவரை எடுக்காமல், கோழைத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. குறைந்தபட்சம், ஒரு கண்டன அறிக்கையைக் கூட வெளியிட துணியவில்லை.

2. எஞ்சியிருக்கும் மாலுமிகளின் உயிருக்கும் அச்சுறுத்தல் சரியான பதில் அளிக்காமல் மழுப்பும் ஒன்றிய அரசு

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் இந்தியா கொண்டுவரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நடுக்கடலிலேயே அவர்கள் விடப்பட்டா ர்களா என்று தெரியவில்லை. காயமுற்றவர்களும் மீட்கப்பட்டு இந்தியா கொண்டு வரப்பட்டார்களா விடையில்லை. என்பதற்கு

இந்த சூழலில், மேற்கொண்டு



ஆயிரக்கணக்கான மாலுமிகள் பெர்சிய வளைகுடாவில் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்களின் நிலை என்ன, இவர்களின் பாதுகாப்பிற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்விகளுக்கு, ஒன்றிய அரசு சரியான பதிலை அளிக்காமல் மழுப்பியுள்ளது.

3. பிரதமரின் 'விஷ்வகுரு' வேடம் மீண்டும் கலைந்துள்ளது:

சர்வதேச அரசியல் சூழல் ஏற்படும் போதெல்லாம், 'இது விஷ்வகுருவின் அரசாங்கம்' என்று போலியான ஒரு வீரக் கதையாடலை ஒன்றிய அரசும், அதன் ஆதரவாளர்களும் உருவாக்குகின்றனர். 'மற்ற நாடுகள் நம்

பிரதமரைப் பார்த்து அஞ்சுகின்றன' என்று கூச்சமே இல்லாமல் நாட்டு மக்களை நம்பவைக்க முயல்கின்றனர்.

ஆனால், நடைமுறைச் சூழல் வேறு. சீன ஆக்கிரமிப்புக்கு மவுனம் காத்தது முதல் இப்போது பெர்சிய வளைகுடாவில் நம் மாலுமிகளை தவிக்க விட்டிருப்பது வரை, இந்த விஷ்வகுருவின் அரசாங்கம் இந்தியாவின் தன்மானத்தையும் இந்தியர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இனிமேலும் வீர வசனங்களைப் பேசி நாட்டு மக்களை ஏமாற்றாமல், நமது மாலுமிகளை பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை, ஒன்றிய அரசு உடனடியாக எடுக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கல்லணை காத்தான்
### ஏப்ரல் 3 (2005)



**தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. மாதவன்
### ஏப்ரல் 3 (2018)



**திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.**

**1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கியக் காரணமாக இருந்தவர்.**

**அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறைகளின் அமைச்சராகப் பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.